මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
MINISTRY OF FINANCE AND PLANNING

මහ ලේකම් කාර්යාලය, කොළඹ 01. | செயலகம், கொழும்பு 01. | The Secretariat, Colombo 01.

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-011-2449823
වෙබ් අඩවිය / வெப்சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: PED/ சுற்றுநிருபம் /2013
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2013.01.15

பொது தொழில் முயற்சி சுற்றுநிருப இல. : 01/2013

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும்
பொது தொழில் முயற்சிகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

**பொது தொழில் முயற்சிகளைச் சேர்ந்த ஊழியர்களின் இளைப்பாறல் வயது**

பொது தொழில் முயற்சிகளைச் சேர்ந்த ஊழியர்களின் இளைப்பாறல் தொடர்பாக 12/1760/504/158 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைவாக பின்வரும் ஒழுங்குவிதிகளை செயற்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதற்கமைவாக 2013-01-01 ஆம் திகதியிலிருந்து அவ்வொழுங்கு விதிகள் செயற்படுத்தப்படும்.

I. பொது தொழில் முயற்சிகளைச் சேர்ந்த ஊழியர்களின் தன்னார்வ இளைப்பாறல் வயது 55 ஆகியதுடன் எந்தவொரு ஊழியரும் 55 வயதுக்கு அதிக காலம் சேவையினைத் தொடர்வதாயின் சேவையினை நீடிக்கும் வேண்டுகோள் இல்லாமல் கட்டாய ஒய்வூதிய வயதான 60 வயது வரை சேவையில் தொடர்ந்து இருப்பதற்கு முடியும்.

II. 55 முதல் 60 வயது வரையான காலப்பகுதிக்குள் ஊழியரின் தற்துணிபுக்கு அமைவாக நியமன வழங்குநருக்கு 03 மாத காலத்திற்குள் முழுமையான அறிவித்தல் வழங்குவதன் மூலம் ஊழியர் இளைப்பாற முடியும்.

III. செயலாற்றுகை மற்றும் வினைத்திறன் திருப்திகரமாக காணப்படாத ஊழியர் ஒருவருக்கு 55 வயதுக்கு மேல், சேவை நீடிப்பினை வழங்காதிருப்பதற்கு நியமன அலுவலர் தீர்மானம் எடுப்பாராயின், அதற்கெதிராக அவ்வலுவலர் மேன்முறையீடு ஒன்றினை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பமொன்றினை வழங்கும் வகையில் 06 மாத கால முன் அறிவித்தலொன்றினை வழங்குவதன் மூலம் இளைப்பாறச் செய்யும் அதிகாரம் நியமன அலுவலரிடம் காணப்படுகின்றது.

பொது தொழில் முயற்சிகளில் உயர்ந்த முகாமைத்துவ தரங்களைச் சார்ந்த ஊழியர்கள் இளைப்பாறுகின்ற போது ஏற்படும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேண்டி பொறுத்தமான மாற்றீட்டு திட்டத்தினை தயாரிப்பது முகாமைத்துவ சபையின் பொறுப்பாகும்.

அமைச்சரவையின் மூலம் பெறப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 1992-04-20 ஆம் திகதிய EA02/BC/PB/01 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் மற்றும் உபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் 2004-12-17ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாக, பொதுத்திறைசேரியின் சுற்றுநிருபத்தினை பின்பற்றும் கட்டாயத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள அரசாங்க வங்கிகள் தொடர்பாக இச்சுற்றுநிருபத்தின் விதிமுறைகள் ஏற்புடையதாகாது என்பதுடன் அந்நிறுவனங்களிலுள்ள ஊழியர்களின் சேவை நீடிப்பு தொடர்பான தீர்மானம் பணிப்பாளர்கள் சபையின் முடிவுக்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொது தொழில் முயற்சிகளின் ஊழியர்களது இளைப்பாறல் வயது தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள பொது தொழில்முயற்சி சுற்று நிருப இல. 60 இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

இது தொடர்பில் தெளிவுபடுத்தல் அவசியமாயின் பொதுதொழில் முயற்சி பணிப்பாளர் நாயகம் (தொ.பே.இல.: 2484617) அல்லது மேலதிக பணிப்பாளர் நாயகத்தினை (தொ.பே.இல.: 2484623) தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**ஒப்பம்/பீ.பி.ஜயசுந்தர**
**திறைசேரி செயலாளர்**

பிரதி:
1. சனாதிபதிகளின் செயலாளர்
2. அமைச்சரவை செயலாளர்
3. கணக்காய்வாளர் நாயகம்
4. செயலாளர், தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழு
5. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
6. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்